# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

மானியக் கோரிக்கை எண் – 49

## அறிவிப்புகள்
## 2019–2020

**கே.ஏ. செங்கோட்டையன்**
பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அறிவிப்புகள் 2019–2020

## 1. சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் ரூ.825.00 இலட்சம் செலவில் செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைத்தல்

உயர் நிலையிலான தடகளப் போட்டிகள் அனைத்தும் தற்போது செயற்கை இழை ஓடுதளப் பாதைகளில் மட்டுமே நடத்தப்படுவதால், நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் உள்ள தடகள ஓடுபாதையினை செயற்கை இழை தடகள ஓடுபாதையாக மாற்றி அமைப்பது மிகவும் அவசியமாகிறது. எனவே, இப்பகுதியில் உள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர் பெரிதும் பயன் பெறும் வகையில் சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ. 825.00 இலட்சம் செலவில் செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைக்கப்படும்.

## 2. மதுரை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விளையாட்டு விடுதிகளில் ரூ.132.31 இலட்சம் செலவில் சிறப்பு பழுது பார்க்கும் பணிகள் மற்றும் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக பள்ளி மாணவ, மாணவியர் தங்கி விளையாட்டுப் பயிற்சி பெறும் வகையில் 27 விளையாட்டு விடுதிகள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. மதுரை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள விளையாட்டு விடுதிகளில் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் மற்றும் கூடுதல் வசதிகள் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.132.31 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

## 3. வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சிக் கூடத்தை ரூ.150.00 இலட்சம் செலவில் தரம் உயர்த்துதல்

வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சிக்கூடம் தினசரி பயிற்சிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வசதியைப் பயன்படுத்தி பெருமளவில் ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டு வீரர்கள் உருவாகியுள்ளனர். எனவே, மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள் நடத்துவதற்கு ஏதுவாக, வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சிக்கூடம் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ. 150.00 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்படும்.

## 4. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் மின்னணு மொழி ஆய்வகம் ரூ.14.52 இலட்சம் செலவில் அமைத்தல்

மாணவர்கள் கல்வி கற்க சரியான சூழலை அமைப்பதற்கும், அவர்களது கல்வி சிறக்கவும், நவீன முறை கல்விச் சூழலில் நேர்முகத் தேர்வினை எதிர்கொள்ளவும், வேலைக்காக பல்வேறு இடங்களுக்குச் செல்லவும் மின்னணு மொழி ஆய்வகம் அத்தியாவசியமாகிறது. எனவே, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் மின்னணு மொழி ஆய்வகம் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.14.52 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**கே.ஏ. செங்கோட்டையன்**
பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்